# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

நகராட்சி அலுவலகம், தனி அலுவலர் (ம) ஆணையர்,
திருவேற்காடு திருவேற்காடு நகராட்சி.
**நாள்: 30.04.2020**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1063** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஏப்ரல் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1064** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் ஏப்ரல் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1065** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் ஆணையர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN 20 CZ 0389 (Bolero) வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு (Insurance) 06.05.2020 அன்றுடன் முடிவு பெறுவதால் 07.05.2020 முதல் 06.05.2021 வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்படி வாகனத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திட வேண்டி, அதற்கான கட்டணம் The New India Assurance Compaly Ltd., நிறுனத்தாரின் புதுப்பித்தல் அறிவிப்பு கடிதம் படி காப்பீடு தொகை ரூ.14,164/– என பெறப்பட்டடுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு காப்பீடு தொகையினை பொது நிதியிலிருந்து காசோலையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ. அனுமதி அளிக்கலாம்.

ஆ. மேற்படி ஈப்பு வாகன பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1066** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 17.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவேற்காடு நகராட்சியில் 12 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 49 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளுக்கு தேவையான திரவ குளோரினேசன் சப்ளை செய்தல். | 9.60 | M/s.RIO Technologies, No.2/614, Rathinapuri Avenue, Uthukuli Road, Kulipalayam Four Corner, Periyapalayam Post, Tirupur-641607<br><br>M/s.ASK Unique Solutions, No.32, Kuyapettai Street, Ramakrishna Main Road, Karampakkam, Porur, Chennai-600116. | 0.67 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>10.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

**அ)** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.RIO Technologies நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1067** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு 18 வார்டுகளை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். இதில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் தொகையுடன் கூடிய 28.50 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட நகரமாகும். இந்நகராட்சி சென்னை மாநகராட்சி ஒட்டியுள்ள வளர்ந்து வரும் நகராட்சியாகும். மேலும், இந்நகராட்சி எல்லையில் புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் திருக்கோயிலும், ஸ்ரீவேதபூரிஸ்வரர் திருக்கோயிலும் அமைந்துள்ள சுற்றுலா தளமான ஆன்மீக பூமியாகவும் திகழ்கிறது.

இதனை தொடர்ந்து, இந்நகராட்சியில் இதுநாள் வரை குடிநீர் திட்டம் ஏதும் இல்லாததால் நிலத்தடி நீர் ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் உறிஞ்சப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் சூழல் உள்ளது. மேலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால் ஆழ்துளை குழாய் கிணறு மூலம் விநியோகம் செய்யப்படும் இக்குடிநீர் மிகவும் போதுமானதாக இல்லை.

எனவே, இந்நகராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் (New Water Supply Scheme) உருவாக்கிடவும் அதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை

(Details Project Report) தயாரித்திடவும் கலந்தாலோசகர் (Consultant) ஒருவரை நியமத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) குடிநீர் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1068 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

திருவேற்காடு நகராட்சியில் தினந்தோறும் வசூல் செய்யப்படும் தொகைகள் வைப்பதற்கு உரிய பாதுகாப்பு பெட்டக வசதி போதுமானதாக இல்லாத காரணத்தினால் இரண்டு வகையான சாவிகள் கொண்ட லாக்கறை அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1069 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக கீழ்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதன் நேர் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க கிருமி நாசினி தெளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல். | 9.90 |
| 2. | கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தொற்று ஏற்பட்டுள்ள பாதிப்படைந்த பகுதியில் சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைத்தல். | 9.50 |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1070 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

திருவேற்காடு நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி வாகன எண்.TN 12 T 6859 என்ற வாகனத்தில் Hose லைன் துண்டிக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், மேற்கண்ட வாகனத்திற்கு Hydralic Oil வாங்க வேண்டிய அவசியத்தினை கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.SP Automobile,<br>No.223, Avadi-Poonamallee Main Road,<br>Veeraragavapuram, Chennai – 600 077 | குறைவு |
| 2. | M/s.Sri Canter Automobile,<br>No.73, Palani Mudaliyar Street,<br>Kuppusamy Nagar, Avadi Road,<br>Chennai – 600 056 | அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட வாகன பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி தொடர்ந்தமைக்கும், மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1071 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக முக்கிய பிரதான சாலைகளிலும், சாலை சந்திப்புகளிலும் மற்றும் தெரு பகுதிகளிலும் கொரோனா தடுப்பு எச்சரிக்கைக்காக காவல் துறையினர், பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் ஆய்வு மேற்கொள்ள வசதியாக சாமியான பந்தல்கள் மற்றும் இருக்கை வசதிகள் அமைத்துக்கொள்ளவும், அதற்கான தோராய மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக அரசால் 144 ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.69 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் திரு.G.மதிவேலன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1072 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

இந்நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN 20 D 8685 வாகனத்தில் குடிநீர் டேங்கர் மிகவும் பழுதடைந்தும், குடிநீர் சேமிக்க இயலாமல் தெருக்களில் செல்லும் போது சேதமடைந்த பகுதியின் வழியே கசிந்து பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டு சேதத்தினை வெல்டிங் வைத்து சீர்செய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) | | |
|---|---|---|---|---|
| | | **M/s.Sri Ram's Body Builders, No.9/1, Thanigai Garden, Vetthalai Thottam, Sennerkuppam, (Avadi Road), Poonamallee, Chennai-56** | **M/s.Sri Ayyanar Body Builders, No.2/2, Yadaval Street, Thiruverkadu, Chennai-77** | **M/s.Saravana Body Works, No.3/715, Palani Mudali Street, Kuppasamy Nagar, Sannerkuppam, Chennai-56** |
| | | **Amount (Rs.)** | **Amount (Rs.)** | **Amount (Rs.)** |
| 1. | TN 20 D 8685 வாகனத்தில் ஏற்பட்டுள்ள சேதமடைந்த பகுதியினை வெல்டிங் செய்தல் | 27500.00 | 35200.00 | 37500.00 |
| 2. | சரக்கு மற்றும் சேவை வரி (18 %) | 4950.00 | 6336.00 | 6750.00 |
| | மொத்தம் | **32450.00** | **41536.00** | **44250.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Sri Ram's Body Builders,** நிறுவனத்தரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1073 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க பொது நிதி **2020–21**–ன் கீழ் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் நுழைவாயில் அருகில் கை அலம்பி செல்ல ஏதுவாக Wash Basin வசதி அமைத்துக் கொள்ளவும், மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) | | |
|---|---|---|---|---|
| | | **M/s.Kumaresan Contractor, No.1/197,Perumal Koil Street, Vanagaram, Mettukuppam, Chennai-95** | **M/s.SV Swamy Construction, No.19/37, Padmanaba Naidu Street, Varadharajapuram, Ambattur, Chennai-53** | **Thiru.G.Vijayakumar, No.1/6, Maruthi Street, Venkatapuram, Ambattur, Chennai-53.** |
| | | **Amount (Rs.)** | **Amount (Rs.)** | **Amount (Rs.)** |
| 1. | இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருக்க அலுவலக நுழைவாயில் அருகில் கை அலம்பி செல்ல ஏதுவாக Wash Basin வசதி அமைத்தல் | 8520.00 | 9250.00 | 11625.00 |
| 2. | சரக்கு மற்றும் சேவை வரி (12 %) | 1022.00 | 1110.00 | 1395.00 |
| | மொத்தம் | **9542.00** | **10360.00** | **13020.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Kumaresan Contractor,** ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1074 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.13

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 30.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் உள்ள தெருக்களுக்கும், பொதுமக்கள் செல்லும் பகுதிகளில் கிருமி நாசினி பயன்படுத்தி தெருக்களில் தெளிக்க ஏதுவாக 6.50 HP பெட்ரோல் இன்ஜின் மற்றும் உதிரி பாகங்கள் புதியதாக சப்ளை செய்தல் | 1.00 | M/s.குமரேசன் கான்ட்ராக்டர்<br><br>G.விஜயகுமார் | 0.71 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.94 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து முக்கிய பிரதான சாலைகள், நகர்புறங்களில் உள்ள தெருக்கள், சாலை சந்திப்புகளை சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைத்தல். | 2.00 | N. செல்வராஜ்<br><br>V.பார்த்திபன் | 0.29 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.02 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**
அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1075 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது நிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி தொளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அவசர பணியாக மேற்கொள்ள தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட

விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) | | |
|---|---|---|---|---|
| | | **M/s.**குமரேசன் கான்ட்ரக்டர், எண்.1/197, பெருமாள் கோயில் தெரு, வானகரம், மேட்டுக்குப்பம், சென்னை–96 | திரு.G.மதிவேலன், எண்.32எ, 4வது பிரதான சாலை, வள்ளலார் நகர், பட்டாபிராம், சென்னை–72 | திரு.P.சந்திரன், எண்.10, அன்னை தெரசா தெரு, நெற்குன்றம், சென்னை. |
| | | **Amount (Rs.)** | **Amount (Rs.)** | **Amount (Rs.)** |
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க கிருமி நாசினி தெளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் | 972950.00 | 994300.00 | 992775.00 |
| | மொத்தம் | **972950.00** | **994300.00** | **992775.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Kumaresan Contractor,** ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அவசர பணியாக மேற்கொண்டு நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1076** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் கீழ் பயன்படுத்தப்பட்டு Battery Operated Vehice (BOV) வாகனத்தின் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை வீட்டுக்கு வீடு சென்று சேகரம் செய்து பசுமை உரக்குடில்களுக்கு கொண்டு செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி 13 வாகனங்களில் உள்ள பேட்டரி பழுதடைந்து வாகனத்தினை இயக்க முடியாமல் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனப்பணியின் அவசர அவசியத்தினை கருதி 13 வாகனங்களுக்கு புதியதாக Lithium Battery வாங்கிக்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1077** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.16</u>

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் வேகமாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட வீடுகள் மற்றும் அப்பகுதியை சுற்றியுள்ள பகுதிகளில் கைவிசை தெளிப்பான்கள் மூலம் கிருமி நாசினியை தெளிக்க கைவிசை தெளிப்பான்கள் 20 எண்ணிக்கையில் மிஸ்ட் ஸ்பேரயர் 3 எண்ணிக்கையிலும் வாங்கி உபயோகித்திட பணியின் அவசர அவசியத்தை கருதி அரசின் 144 தடை உத்திரவு நடைமுறையில் இருந்ததால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம்

ஆகும் என்பதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள உடனடியாக தெளிப்பான்கள் வாங்கும் பணிகள் மேற்கொண்டமைக்கும், இதற்கென ஆகும் செலவீனம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 1956/2020/எச்1

**அலுவலக குறிப்பு:-**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்று பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1078 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.17

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் **BOB CAT** பதிவு எண்.**TN-12 AE-2241** வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 28.05.2020 உடன் முடிவடைவதால் அடுத்த ஒரு வருட காலத்திற்கு 29.05.2020 முதல் 28.05.2021 வரை வாகன காப்பீடு கட்டணம் பின்வரும் வாகனங்களுக்கு The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1946/2020/எச்1)

**வாகனங்களின் விவரம்.**

| வ. எண் | வாகனம் எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1. | TN 12 AE 2241 | 28.5.2020 | ரூ. 22,192/– |
| நிகரத்தொகை | | | ரூ. 22,192/– |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1079 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.18

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் வேகமாக பரவி வருவதை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருவதால் நகராட்சியில் உள்ள பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசரங்கள் (அறிவிப்பு நோட்டீஸ்) அச்சடித்து வழங்கிட மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர் அவர்களின் செயல்முறை கடிதம் செ.மு.ந.க.எண்.012/2019/அ7/உ.இ(ஊ) நாள்.30.03.2020ன்படி இந்நகராட்சிக்கு 50,000 எண்ணிக்கையில் அச்சடித்து விநியோகம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொரோனா வைரஸ் தடுப்பு விளம்பரம் அடங்கிய துண்டு பிரசரங்கள் 50,000 எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கிட ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசமாகும் என்பதாலும் பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொண்டதையும் இதற்கென ஆகும் செலவீனம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1910/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:-**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1080 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.19</u>

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் ஏற்கனவே நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.என்.செல்வராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த விதிகளின்படி அதே விலைவிகிதத்தின்படி நகராட்சி பகுதியிலிருந்து குப்பைகளை நாவலூர், அரக்கோணம் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு எடுத்து செல்வதற்கும் மேலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.90/– இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2283/2019)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1081** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.20</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் லெமன் கிராஸ் 100 லிட்டர் மற்றும் கைகள்கழுவும் ஆயில் என்னும் கிருமி நாசினியை நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் , நகராட்சியில் போதிய அளவு லெமன் கிராஸ் 100 லிட்டர் மற்றும் கைகள்கழுவும் ஆயில் இருப்பு இல்லாததாலும் பணிகளின் அவசர அவசியத்தை கருதியும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவு செய்யவும் மற்றும் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1082** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.21</u>

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தவும் நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி பிளிச்சிங் பவுடர் என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு

வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் ஏற்கனவே பெறப்பட்ட உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களின் விலைப்புள்ளிகளின்படி குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று இந்நகர்மன்ற தீர்மானம் எண். நாள், அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள **5000** கிலோ **பிளிச்சிங் பவுடர்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.961/2020/எச்1**

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1083** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவிப்பின்படி தினசரி பணியாளர்களின் பாதுகாப்பினை கருதி ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் முககவசம் மற்றும் பலமுறை உபயோகப்படுத்தப்படும் முககவசம் (Mask Reusable and Mask One Time Use) என்னும் தற்போது இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் **144** தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணிகள் மேற்கொள்ளவும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் கட்டுப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண்.1865/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1084** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.23

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதி **நீர்த்தசுண்ணாம்பு** என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்க

அறிவுறுத்தப்பட்டதால் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. ந.க. எண்.1865/2020/எச்1.

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1085** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.24

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் கொரோனா வைரஸ் (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இறந்த உடலின் மீது மற்றும் அதன் வாகனம் செல்லும் பகுதி முழுவதும் இரு பக்கங்களில் தெளிக்கவும் மற்றும் இடுகாட்டு பகுதி முழுவதும் தெளிக்கவும் Sodium Hydrocholorite என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததாலும் **Sodium Hydrocholorite** 1500 லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் கட்டுப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண். 1900/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1086** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.25

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படும் வகையில், நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர், தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர், மனித கழிவுகளை மனிதனே அகற்றும் தடை செய்தல் – **ஸ்டிக்கர்**, குப்பைகள் தரம்பிரித்து வழங்க அறிவிப்பு மற்றும் நோட்டீஸ் அச்சடித்து வழங்க மத்திய மாநில அரசு 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி உள்ளூர் மற்றும் வெயியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து

மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண்.1961/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1087 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.26

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தெருக்களிலும் இரண்டு பக்கங்களில் வாகனம் மூலம் மின் மோட்டார் பொருத்தி தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்த, லைசால் என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஏற்கெனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **Sri Balaji Marketing** நிறுவனத்திடம் அதே விலைவிகிதத்தின்படி **லைசால்** என்னும் கிருமி நாசினி 2000 லிட்டர் கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண்.1961/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1088 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.27

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதி **நீர்த்தசுண்ணாம்பு** என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதால் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பதால் பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகாக நீர்த்த சுண்ணாம்பு 12000 கிலோ சப்ளை செய்ய கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | நீர்த்த சுண்ணாம்பு | தொகை |
|---|---|---|---|
| 1 | **R.S.R** எண்டர்பிரைசஸ்<br>எண். 9/118, பழைய GST ரோடு,<br>திலகவதி நகர், இரும்பூலியூர் கிழக்கு<br>தாம்பரம், சென்னை. | 1 கிலோ | 15.00 |
| 2 | பாலாஜி அசோசியேட்ஸ்<br>எண்.20பி பெருமாள் கோவில் தெரு,<br>இரும்பூலியூர் மேற்கு தாம்பரம், சென்னை. | 1 கிலோ | 21.00 |
| 3 | கிருதிக் அசோசியேட்ஸ்<br>எண்.13/3, தர்ம தோட்டம் தெரு,<br>இரும்பூலியூர் மேற்கு தாம்பரம், சென்னை. | 1 கிலோ | 24.50 |

மேற்படியான விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள RSR நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருந்தபடியால் சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு நீர்த்த சுண்ணாம்பு பெறப்பட்டமைக்கும் அதற்கான செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1089 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.28

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஸ்டிக்கர்கள், பேனர்கள் அச்சடித்து வழங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் பட்டியல்கள் பார்வைக்கும் அனுமதிக்கலாம்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விளம்பர அறிவிப்பு | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ்<br>எண். 496, பசுபதி தெரு,<br>நசரத்பேட்டை | A4 Size Sticker with scanning | 1 | 16.00 |
| | | A3 Size Front size Back | 1 | 4.00 |
| | | A5 Size Notice | 1 | 1.00 |
| | | 300 GSM Art Board(Front & Back ) | 1 | 15.00 |
| 2 | சரஸ்வதி டிஜிட்டல் பிரிண்டர்ஸ்,<br>எண். 4/419, எம்.ஜி.ஆர் நகர்,<br>அகரமேல், பூந்தமல்லி | A4 Size Sticker with Scoring | 1 | 17.00 |
| | | A3 Size Front &Back | 1 | 5.00 |
| | | A5 Size Notice | 1 | 1.50 |
| | | 300 GSM Art Board (Front & Back) | 1 | 16.00 |
| 3 | பவானி பிரிண்டர்ஸ்,<br>எண். 73, வைத்தீஸ்வரன் கோவில் தெரு,<br>பூந்தமல்லி | A4 Size Sticker with Scoring | 1 | 18.00 |
| | | A3 size Front Notice&Back | 1 | 6.00 |
| | | A5 size Notice | 1 | 2.00 |
| | | 300 GSM Art Board (Front & Back ) | 1 | 16.50 |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ஓம் சக்தி** எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1090 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.29

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், **(covid 19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் அறிவுரையின்படியும் தினசரி பொது மக்களின் பாதுகாப்பினை கருதி **லைசால்**

என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டதால் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக கொள்முதல் செய்யவும் மேலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால் கொரோனா வைரஸ் தொற்று நோயினை கட்டுப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பதால் பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகாக **லைசால் 2000 லிட்டர்** சப்ளை செய்ய கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | லைசால் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்<br>எண். 9–5–1, பஜார் தெரு, வேலப்பன்சாவடி,<br>அயனம்பாக்கம், திண்டுக்கல், பின்கோடு –624204. | 1 லிட்டர்<br>+GST18% | 280 |
| 2 | ஸ்ரீ வினாயகா பார்மா<br>எண்.33, வெங்கட்ராமன் தெரு,<br>பொள்ளாச்சி, கோயம்புத்தூர், பின்கோடு–642001. | 1 லிட்டர்<br>+GST18% | 290 |
| 3 | ஸ்ரீ முருகவேல் ஏஜென்சிஸ்<br>எண்.17/2, பாரதி தெரு, மகாலிங்கபுரம் பேஸ்ட்,<br>பொள்ளிச்சி –642002. | 1 லிட்டர்<br>கூடுதல்<br>+GST18% | 3.00 |

மேற்படியான விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருந்தபடியால் சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு **லைசால் 2000 லிட்டர்** பெறப்பட்டமைக்கும் அதற்கான செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1091 நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.30

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், திருவள்ளூர், உதவி இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர்அவர்களின் அறிவுரைகளின்படியும் தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, Hand Sanitation,Thhemal Scanner என்னும் கிருமி நாசினி தற்போது இருப்பு இல்லாததாலும் Hand Sanitation 600 லிட்டர், மற்றும் Thhemal Scanner 1No சப்ளை செய்யும் பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட காலதாமதம் ஆகும் என்பதாலும், அரசின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதி கொரோனா வைரஸ் கட்டுப்படுத்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க. எண். 961/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட

நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1092** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

<u>**பொருள் எண்.31**</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தெருக்களிலும் இரண்டு பக்கங்களில் வாகனம் மூலம் மின் மோட்டார் பொருத்தி தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்த, லைசால் என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஏற்கெனவே குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **Sri Balaji Marketing** நிறுவனத்திடம் அதே விலைவிகிதத்தின்படி **லைசால்** என்னும் கிருமி நாசினி 2000 லிட்டர் கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. <u>**ந.க. எண்.1961/2020/எச்1.**</u>

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1093** **நாள்.30.04.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

பொருள் எண்.32

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் நலன் கருதி போக்குவரத்தை சரி செய்ய கீழ்க்கண்ட சாலைகளை மேம்படுத்த அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண். | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1, 5 & 17 | மேல்அயனம்பாக்கம் பச்சையப்பன் நகர் வசந்தா தெரு, திருவள்ளூவர் தெரு, பெருமாள் கோயில் தெரு, அக்ரஹாரம் தெரு, கஸ்தூரிபாய் நகர் மற்றும் அரவிந்த நகர் பகுதிகளுக்கு தார்தளம் அமைத்தல். | 2.305 | 4.10 - 4.50 | 131.00 |
| 2. | II | 8, 9 & 14 | நூம்பல் ஜட்ஜஸ் காலனி, நூம்பல் தேவி கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, நூம்பல் கிருஷ்ணா நகர், நூம்பல் பாலாஜி நகர் மற்றும் கே.என்.வி நகர் 1வது, 2வது தெருக்களுக்கு தார்தளம் அமைத்தல். | 2.322 | 4.10 - 5.00 | 167.00 |
| 3. | III | 15 | நடேசன் நகர், அன்னை வித்யாஷிரமம் பள்ளி தெரு, செல்வகணபதி நகர், ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, அபிராமி நகர் 5வது தெரு, மகாலட்சுமி நகர் மற்றும் கருமாரியம்மன் நகர் விரிவு பகுதிகளுக்கு தார்தளம் அமைத்தல். | 2.740 | 4.10 - 4.50 | 184.00 |
| | | | மொத்தம் | **7.367** | | **482.00** |

அலுவலக குறிப்பு :–

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.482.00 இலட்சம் மதிப்பீட்டில் **ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–21–ம்** ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெறவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1094** **நாள்.30.04.2020**

தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.

---

(ஓம்) தனி அலுவலர் (ம) ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி

// உண்மை நகல்//

ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.